eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

# Management Elements in Ettuthogai Literature

**K. Arulmurugan[1],**
[1]PhD Research Scholar (Part-time), Registration Number: B1/TAM24PDEC0589/2024,
Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore-641 049,
Email: arulthumbalam@gmail.com
**K. Nagarathinam[2],**
[2]Assistant Professor, Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous),
Bharathiar University, Coimbatore-641 049

**Abstract:**

Information about management messages is scattered in the literature of the eight books. This study shows that there are records related to management in every field. It can be known in this study that management has been important in the life of our Tamil community. This study indicates that there are references in the books of the book including water management, financial management, business management, education management, agricultural management. To improve, management became essential. Man created his own good situation. Management actions are essential to face the external life situations that surround him. Education management activity was primarily to achieve fame, glory, gift etc. through education. Management programs support to live life with such environments.

**Keywords** : *Management, Sectors, Water, Land, Education, Business..*

**References:**

1. Aringar Saa.ve Subramanian Sangha Literary October Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
2. Aringar Saa.Ve.Subramanian Sangha Literature October Volume-1, Manivasakar Publishing House, Chennai First Edition-2021
3. Pathippaasiriyar V. Muneeswaran, kondrai Vendan, Kannal Publishing House, Sivakasi First Edition-2014
4. Aringar Saa.Ve Subramanian Sangha Literary Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
5. Aringar Saa.Ve Subramanian Sangha Literary Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
6. Aringar Saa.Ve Subramanian Sangha Literary Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
7. Aringar Saa.Ve Subramanian Sangha Literary Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
8. Thirukkural Urai vilakakam Pa. Valan Arasu 41,tha.mu.kottam,Thirunelveli 627 001-First Edition
9. Aringar Saa.Ve Subramanian Sangha Literary Volume-1,Manivasakar Publishing House,Chennai First Edition-2021
10. Thirukkural Urai vilakakam Pa. Valan Arasu 41,tha.mu.kottam,Thirunelveli 627 001-First Edition
11. S. Kelamareeswari, Naladiyar, Puliyur Kesigan urai, Saratha Publishing House. Chennai First Edition, December- 2010
12. Kavithai pezhai ,Neethi Venbha - Ka.P.Seikuthambi Bhawalar | Nature 5 | Class 10 Tamil

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# எட்டுத்தொகை இலக்கியத்தில் மேலாண்மை கூறுகள்

**[1]க. அருள்முருகன்**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), Registration Number: B1/TAM24PDEC0589/2024, டாக்டர் எஸ் .என் .எஸ் ராஜலட்சுமி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 049

**[2]க.நாகரத்தினம்,**

உதவிப்பேராசியர், டாக்டர் எஸ் .என் .எஸ் ராஜலட்சுமி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) கோயம்புத்தூர்-641 049

**ஆய்வுச் சுருக்கம்:**

எட்டுத்தொகை இலக்கியங்களில் மேலாண்மை செய்திகள் குறித்த தகவல்கள் விரவி கிடக்கின்றன.ஒவ்வொரு துறைகளிலும் மேலாண்மை சார்ந்த பதிவுகள் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு உள்ளது.நம் தமிழ்ச்சமூக மக்கள் தன் வாழ்வியலில் மேலாண்மை முக்கியமானதாக இருந்துள்ளது என்பது இவ்வாய்வில் அறியலாகிறது.மேலாண்மை என்ற தலைப்பில் நீர் மேலாண்மை,நிதி மேலாண்மை,வணிக மேலாண்மை,கல்வி மேலாண்மை,வேளாண் மேலாண்மை உள்ளிட்ட குறிப்புகள் எட்டுத்தொகை நூல்களில் உள்ளதை இவ்வாய்வு குறிப்பிடுகிறது.மனிதனின் வாழ்வாதார கட்டமைப்புகளைச் சீரமைக்க,வாழ்வின் தரங்களை மேம்படுத்த,மேலாண்மை இன்றியமையாததாக உருவாகியது.தனக்கு உண்டான நல்ல சூழ்நிலையை மனிதன் தானே உருவாக்கிக் கொண்டான். .தன்னுடைய அறிவு செயல்களை மேம்படுத்தி நீர்.நிலம்,கல்வி,வணிகம் உள்ளிட்ட துறைகளில் மேம்பாடு உடையவனாக செயல்பட்டான் என்பது இவ்வாய்வில் அறியப்படுகிறது. தன்னை சூழ்ந்துள்ள புற வாழ்க்கை சூழ்நிலைகளை எதிர்கொள்ள மேலாண்மை செயல்கள் இன்றியமையாததாக உள்ளது.புற வாழ்கை சூழ்நிலைகளை நிர்ணயம் செய்வதாக கல்வி இன்றளவும் மேன்மை அடைந்த்துகொண்டு உள்ளன. கல்வி மூலம் புகழ், பெருமை, கொடை உள்ளிட்டவற்றை அடைய கல்வி மேலாண்மை செயல் முதன்மையாக இருந்தது.அத்தகைய சூழல்களைக் கொண்ட வாழ்கையை வாழ மேலாண்மை திட்டங்கள் துணை நிற்கின்றன.

**திறவுச் சொற்கள் :** *மேலாண்மை, துறைகள், நீர்.நிலம்,கல்வி,வணிகம்*

**முன்னுரை:**

மனிதன் தனக்கு ஏற்படக்கூடிய இட ர்களை எல்லாம் நீக்கி நிர்வாகத் திறனில் மேம்பாடு ஏற்படுத்த முனைந்தான்.தனி ஒருவனாக பெரிய அளவில் மேலாண்மை செயல்களை அவரால் செய்ய இயலவில்லை. தனக்காக ஒரு குழுவை உருவாக்கி அதன் மூலம் அவன் தன் செயல்களில் மேம்பாடு அடைய முயற்சி செய்தான் .குழுவாகச் செயல்படும் பொழுது அவனுக்கென்று ஒரு தலைமை பண்பு

உருவானது.அவனுக்கு ஏற்பட்ட இயற்கை இடர்களைத் தாண்டி வேலை செய்வதற்கு முன்னோட்டமாக அமைந்தது. மேலாண்மை சிந்தனை உருவாகக் காரணமாக இருந்தது. தனக்கு மட்டும் அல்லாமல் தன்னோடு வாழும் அனைத்து மனிதர்களும் நலமுடன் வாழ துணை நின்றன. சங்க கால மனிதனுக்கு மேலாண்மை குறித்த எண்ணங்கள் இருந்தது என்பது தற்காலத்தில் நிர்வாகச் செயல்களை மேம்படுத்த உதவுகிறது. சங்க காலத்தில் நீர் மேலாண்மை மக்களின் வாழ்வில் எதிர் வருகின்ற தலைமுறைக்கு வாழ்கையைச் சிறப்புற வாழ மேலாண்மையாக உள்ளன. சங்க காலத்தில் மக்களின் வாழ்வாதார செயல்களை நிர்வகிக்க மேலாண்மை திட்டங்கள் துணை நின்றன என்பது அறியலாகிறது.தான் மட்டும் வாழ வேண்டும் என்ற சுய நலம் சங்க கால மனிதனிடம் இல்லை என்பது மனிதனின் மேம்பட்ட செயலில் அறியலாகிறது

**நீர் மேலாண்மை:**

நீர் இல்லாமல் உலகத்தில் உயிர்கள் வாழ இயலாது என்பது இயல்பான உண்மையாகும்.இத்தகைய செய்தியைச் சங்கஇலக்கிய நூல்கள் வலியுறுத்துகின்றன. பஞ்ச பூதங்களுள் முதன்மையானதாக இருப்பது நீர் ஆகும்.அத்தகைய நீரை செலவு செய்வது என்பது மேலாண்மை என்ற செயல்களைக் கடைபிடித்தலில் உள்ளது.இதனை,

**“நீரின்றி அமையா உலகம் போல**
**தம்மின்றி அமையா நன்னயந் தருளி” 1**

**-நற்றிணை- பாடல்-2- வரி-1-5**

என்று நற்றிணையில் தலைவி தோழியிடம் கூறுகிறாள். நீர் இல்லாமல் இந்த உலகம் இல்லை.அது போல தலைவன் இல்லாமல் நாம் அனைவரும் வாழ இயலாது என்பதைக் குறிப்பிடுகிறது.

அதே போல தலைவன் மீது கொண்ட காதலை விரித்துரைத்த தலைவி,

**“நீரினும் ஆறள வின்றே சாரல்”2**

**- குறுந்தொகை -பாடல்-2- வரி-1-5**

என்று தலைவி தலைவன் மீது வைத்த காதலை நீரோடு ஒப்பிட்டு கூறுகிறாள். இத்தகைய கருத்துக்களை நூல்களில் அறியும் பொழுது நம் மக்கள் கடலில் மீன் பிடித்தல் மட்டும் அல்லாமல்,முத்து குளித்தல்,பல மெயில் தூரம் பயணம் செய்து கடல் சார்ந்த பொருட்களைத் திரட்டி வந்தனர்.இதனையே

**‘’திரைகடல் ஓடி திரவியம் தேடு”3**

- **தனிப்பாடல் திரட்டு - பாடல்-2- வரி-1**

என்ற ஔவையார் பாடல் வரிகள் துணை நிற்கின்றன. அலைகின்ற கடலில் பயணம் செய்து பொருள் சம்பாதித்து வரவேண்டும் எனவும் அயல்நாடுகளுக்கு சென்று பணம் சம்பாதித்து வரவேண்டும் என்ற கருத்தையும் அவ்வையார் வலியுறுத்துகிறார்.

சங்க இலக்கிய நூல்களான புறநானூற்றில் ஐம்பூதங்களான இதனை,

**“மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும், என்றாங்கு”4**

**-புறநானூறு- பாடல்-2- வரி-1-4**

பாரத போர் நடந்த நாளிலே உதியன் சேரலாதன் நாவலன் தீவின் பேரரசன் ஆவான். கதிரவன் தோன்றும் கீழ்கடலும் மறையும் மேற்கடலும் இடைப்பட்ட புது வருவாய் குன்றாத பெரும் நிலப்பரப்பும் அவனுக்கே உரியன. பொறுமை, ஆராய்ச்சி விரிவு, ஆற்றல் ,ஆட்சித்திறன், அருள் ஆகியவற்றிலே ஐம்பெரும் பூதங்களான நிலத்தையும் வானையும் காற்றையும் நெருப்பையும் நீரையும் முறையே ஒத்து இருக்கக்கூடியவன் என்ற கருத்து அறியலாகிறது.

நீர்,நிலம்,காற்று,ஆகாயம்,நெருப்பு இதனை குறிப்பிடுகிறது. இதனை,

**“வான்முகந்த நீர் மழை பொழியவும்**
**மழை பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல**
**நீரின்றும் நிலத்து ஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்”5**

**-பட்டினப்பாலை-பாடல் வரி-126-130**

வானில் இருந்த நீர் மழையாக கொட்டவும் மலையிலிருந்து நீர் கடலில் செல்லவும் மழை பருவத்திற்கு மழை பெய்து நிலத்திற்கு ஏற்றது போல இருந்து மக்களுக்கு வளத்தை செய்கிறது.

**‘’நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி**
**குடிநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது”6**

**-அகநானூறு-பாடல்-43-வரி-5-6**

வானிலிருந்து மழை நிலத்தில் பெய்து குடிநீராக மக்களுக்கு ப் பயன்படுகிறது

**வணிக மேலாண்மை:**

வணிகம் செய்யும் பொழுது பொருட்கள் உற்பத்தி செய்வது என்பது இன்றியமையாததாகும்.கடல் கடந்து பல நாடுகளுக்குப் பொருட்களை ஏற்றுமதி,இறக்குமதி செய்தல் முதன்மையானதாகும்.வணிக மேலாண்மையில் பொருட்களின் அளவு தராசு மாறாமல் நடுவு நிலைமையோடு இருத்தல் வேண்டும். இதனை

**"கொள்வதும் மிகை கொளாது**
**கொடுப்பதும் குறைபடாது" 7**

**-பட்டினப்பாலை- பாடல் -210-வரி**

என்கிறது பட்டினப்பாலை.பொருட்களை விற்பனை செய்யும் போது எடை போட்டு கொடுக்கும் போது பொருளின் எடை குறையாமல் கொடுத்தனர் தமிழர்கள்.பொருட்களை வாங்கும் போதும் அதிக எடை உள்ள பொருட்களைப் பெற்றுக்கொள்வதும் இல்லை என்பது தமிழர்களின் தலையாய மேலாண்மை பண்பாக இருந்துள்ளது என்பது அறியலாகிறது. வணிக தொழில் செய்து பொருள் ஈட்டுவது என்பது நாணயத்துடன் செயல்பட்டால் மட்டுமே அத்தொழில் சிறந்ததாக விளங்கும்.வணிக தொழிலில் மேலாண்மை செய்வதென்பது வேளாண்மையில் அடுத்த கட்டத்திற்கு நகர்வதாகும்.

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்"8**

**-திருக்குறள்-120**

என்பது திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.இதன் பொருள், வணிகம் செய்யும் தொழிலாளர்கள், பிறருடைய பொருளையும் தனது சொந்தப் பொருள் போலவே பாதுகாப்பாகக் கவனித்துக் கொண்டால், அவர்களது வணிகமும் செழித்து வளரும் என்பதாகும்.

**கல்வி மேலாண்மை:**

கல்வி என்பது விலை மதிப்பிலாததாகும்.கல்வியைக் கற்றவர் சான்றோராக மதிக்கப்படுகின்றார்.அவற்றில் மேலாண்மை திட்ட செயல்கள் விரவிக் கிடக்கின்றன.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**
**கீழ்பால் ஒருவன் கற்பின் மேல்பால்**
**ஒருவனும் அவன் கண்படுமே”** 9

**-புறநானூறு- பாடல்-183-வரி-1-4**

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து"10**

**-திருக்குறள்-120**

என்று திருவள்ளுவர் ஒருவன் தன் வாழ்வில் கற்ற கல்வியானது அவனுடைய ஏழு பிறவிகளுக்கும் துணை நிற்கும் எனக் குறிப்பிடுகிறார். இதனை,

**"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் – தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"11**

**-நாலடியார்-பாடல்-139**

பழமையான சிறப்பினையுடைய அழகிய பாதிரிப்பூவைச் சேர்ந்திருப்பதால் புதிய மண்பானையானது, தன்னிடத்தில் உள்ள தண்ணீருக்குத் தான் நறுமணத்தைக் கொடுத்து, அத்தண்ணீரையும் நறுமணமுள்ளதாக்கும். அதுபோல கல்லாரே ஆயினும் கற்றாரைச் சார்ந்து அவர்போல் நடந்தால் நல்லறிவு நாளும் உண்டாகப் பெறுவர்.

அறிவைப் பெருகுவதும் மக்கள் எளிதில் கல்வியின் சிறப்பைப் பெறவும் கல்வி மேலாண்மை இன்றியமையாததாகும். இதனை,

**''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை**
**அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்**
**பொருத்துவதும் கல்வியென்றே போற்று'' 12**

**- நீதிவெண்பா- பாடல்-15**

அருளினைப் பெருக்கி, அறிவினைச் சீராக்கி ,மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதை போற்றிக் கற்க வேண்டும்.

**முடிவுரை**

இவ்வாறாக இலக்கியங்களில் மேலாண்மை செய்திகள் என்பது கல்வி,நீர் மேலாண்மை ,வணிக மேலாண்மை உள்ளிட்ட செய்திகள் அறியலாகிறது. சங்க காலத்தில் மக்களின் வாழ்வாதார செயல்களை நிர்வகிக்க மேலாண்மை திட்டங்கள் துணை நின்றன என்பது அறியலாகிறது .தன்னுடைய அறிவு செயல்களை மேம்படுத்தி நீர்.நிலம்,கல்வி,வணிகம் உள்ளிட்ட துறைகளில் மேம்பாடு உடையவனாக செயல்பட்டான் என்பது இவ்வாய்வில் அறியப்படுகிறது தான் மட்டும் வாழ வேண்டும் என்ற சுய நலம் சங்க கால மனிதனிடம் இல்லை என்பது மனிதனின் மேம்பட்ட செயலில் அறியலாகிறது.

**துணை நூற் பட்டியல்:**


1. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
2. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
3. பதிப்பாசிரியர் வ.முனீஸ்வரன் , கொன்றை வேந்தன், கன்னல் பதிப்பகம்,சிவகாசி முதல் பதிப்பு-2014
4. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
5. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
6. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
7. அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
8. திருக்குறள் உரை முனைவர் பா.வளன் அரசு விளக்கம் சூர்யா பதிப்பகம் , 41,த.மு.கட்டடம்
9. .அறிஞர் சா.வே சுப்பிரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதல் பதிப்பு-2021
10. திருக்குறள் உரை முனைவர் பா.வளன் அரசு விளக்கம் சூர்யா பதிப்பகம் , 41,த.மு.கட்டடம்
11. எஸ்.கௌமாரீஸ்வரி, நாலடியார், புலியூர் கேசிகன் உரை,சாரதா பதிப்பகம்.சென்னை முதல் பதிப்பு, டிசம்பர் 2010
12. கவிதைப்பேழை, நீதி வெண்பா - கா.ப.செய்குதம்பிப் பாவலர் | இயல் 5 | 10 ஆம் வகுப்பு தமிழ்



**உரிமம்**

CC BY

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.